தினமணி

**பயிர்க் காப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க வலியுறுத்தல்**

First Published : 09 May 2011 02:26:30 PM IST

கும்பகோணம், மே 8: 2009 ஆம் ஆண்டுக்கான பயிர்க் காப்பீட்டுத் தொகை மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வந்தும், இதுவரை விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை என தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் மாவட்டச் செயலர் சுந்தரவிமலநாதன், கூட்டுறவுத் துறையின் மாநிலப் பதிவாளர் யதீந்திரநாத்ஸ்வென், தஞ்சை மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு அனுப்பிய மனுவில் கூறியிருப்பது:

தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2009- 2010 ஆம் ஆண்டில் பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு உரிய காப்பீட்டுத் தொகை முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதால், கடந்த 23.12.2010 அன்று தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கம் சார்பில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி முன் ஆர்ப்பாட்டம் நடத்தி மனு அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, சென்னை மண்டலத்துக்கான தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தை விவசாயிகள் அணுகியபோது, 2009 ஆம் ஆண்டுக்கான மகசூல் இழப்புத் தொகை தில்லியிலிருந்து ஏற்கெனவே வந்துவிட்டது எனவும், அந்தத் தொகை தமிழகத்தில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு கடந்த மார்ச் மாதம் அனுப்பப்பட்டுவிட்டது எனவும் கூறினர்.

அதன்படி, தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கிக்கு நெல் சாகுபடி இழப்புக்கு ரூ. 2.44 கோடியும், உளுந்து, கடலை, வாழை உள்ளிட்ட பயிர்களுக்கு ரூ. 19.63 லட்சமும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு நெல் பயிருக்கு 77.22 லட்சமும், இதர பயிர்களுக்கு ரூ. 11.23 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான நிதி வந்துள்ளது. மொத்தம் ரூ. 3.51 கோடி நிதியை வங்கி நிர்வாகம் தேர்தல் விதிமுறையை காரணம் காட்டி விவசாயிகளுக்கு வழங்காமல் உள்ளது.

இதுதொடர்பாக, தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கம் தேர்தல் ஆணையத்திடம் முறைப்படி கோரிக்கை விடுத்தபோது, நிலுவையில் உள்ள பயிர் காப்பீட்டுத்

தொகை வழங்குவதில் தேர்தல் ஆணையத்துக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து விவசாயிகள், வங்கி நிர்வாகத்தை அணுகிய போது விரைவில் நிதி வந்துவிடும் எனக் கூறுகின்றனர். எனவே, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வந்துள்ள பயிர் காப்பீட்டு நிதியை உடனடியாக அந்தந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பி பட்டுவாடா செய்ய வேண்டும் என மனுவில் அவர் தெரிவித்துள்ளார்.

**உலர் களங்கள் இல்லாததால் விவசாயிகள் அவதி**

First Published : 09 May 2011 12:54:16 PM IST

காரியாபட்டி, மே 8: காரியாபட்டி பகுதியில் உள்ள கிராமங்களில் உலர் களங்கள் இல்லாததால், தானியங்களை உலர வைக்க முடியாமல் விவசாயிகள் அவதிக்குள்ளாகின்றனர்.

காரியாபட்டி, கல்குறிச்சி, வக்கணாங்குண்டு, மல்லாங்கிணர், வரலொட்டி, அழகியநல்லூர், மாந்தோப்பு, பிசிண்டி, அல்லாளப்பேரி ஆகிய பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது.

இந்த கிராமங்களில் தானியங்களை, உலர வைக்கப் போதுமான உலர் களங்கள் இல்லை. இதனால் சோளம், உளுந்தம் பருப்பு, துவரை, தானியங்களை சாலைகளில் உலர வைக்கின்றனர்.

இதுபற்றி வரலொட்டியைச் சேர்ந்த கிருஷ்ணன் கூறுகையில், தானியங்களை உலர வைக்க உலர் களங்கள் இல்லை. இதனால் சாலையில் உலர வைக்கிறோம். உலர் களங்கள் அமைத்துத் தர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தினமலர்

**ஐந்து மாதங்களில் மூன்றாவது முறையாக தேங்காய் எண்ணெய், பிஸ்கட்,சோப்பு விலை உயருகிறது**

மே 10,2011,00:45



சென்னை: மத்திய அரசுஇவ்வாரம், பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதையொட்டி தேங்காய் எண்ணெய், பிஸ்கட்,சோப்பு உள்ளிட்ட பல்வேறு நுகர்பொருள்களின் விலையை உயர்த்த, நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன. கடந்த ஐந்து மாதங்களில் மூன்றாவது முறையாக, இவ்வகைப் பொருள்களின் விலையை நிறுவனங்கள் உயர்த்துகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளில் காணப்படும் பதற்றம், இதர நாட்டுச் செலாவணிகளுக்கு எதிராக, டாலரின் மதிப்பில் உள்ள ஏற்ற, இறக்கம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.

இதனால், உள்நாட்டில் பெட்ரோலியப் பொருள்களின் விலையை உயர்த்த வேண்டிய சூழ்நிலை உள்ளது. அவ்வாறு பெட்ரோலியப் பொருள்களின் விலை, மேலும் உயர்த்தப்பட்டால், மூலப்பொருட்களின் விலையும் உயர்ந்துவிடும்.

தற்போது, நுகர்பொருள் துறைக்கு அத்தியாவசியமான சர்க்கரை, பாமாயில், கொப்பரைத் தேங்காய் உள்ளிட்ட பல்வேறு பொருள்களின் விலை உயர்ந்துள்ளது.

இதையடுத்து, நுகர்பொருள் துறையை சேர்ந்த மாரிக்கோ, தாபர், இந்துஸ்தான் யூனிலிவர் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள், அவற்றின் தயாரிப்புகளின் விலையை, இவ்வாண்டு ஜனவரியில் உயர்த்தினமேலும், அட்டையில் அடைக்கப்பட்ட பொருள்களின் எடையை, 5-10 கிராம் வரை குறைத்தன.இதைத் தொடர்ந்து, மார்ச் மாதத்தில், மீண்டும் நுகர்பொருள்களின் விலை உயர்த்தப்பட்டது. மாரிக்கோ நிறுவனம் அதன் பாரா‹ட் மற்றும் போலா போன்ற எண்ணெய் வகைகளின் விலை, 5 சதவீதம் வரை உயர்த்தியது. நெஸ்@ல நிறுவனமும் அதன் பொருள்களின் விலையை, 5-8 சதவீதம் வரை உயர்த்தியது. மேலும் கோத்ரெஜ், இந்துஸ்தான் லீவர், ஐ.டி.சி., - தாபர் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களும், அவற்றின் தயாரிப்பு பொருள்களின் விலையை உயர்த்தின.

இ@த @பால் இந்துஸ்தான் யூனிலிவர் நிறுவனம், சர்ப் எக்செல், ரின், வீல் உள்ளிட்ட பொருள்களின் விலையை, கிலோவுக்கு 2 ரூபாய் முதல் 156 ரூபாய் வரை அதிகரித்தது. ஒரு கிலோ ரின் பவுடர் விலை, 54 ரூபாயிலிருந்து 58 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது. வீல் விலை, கி@லாவுக்கு 3 ரூபாய் உயர்ந்தது.

இந்நிலையில், கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் (கடந்த சில நாள்கள் நீங்கலாக), பெட்ரோலிய நிறுவனங்களின் இழப்பு அதிகரித்துள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு, மீண்டும் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த, முடிவு செய்துள்ளது. தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட ஐந்து மாநிலங்களின் சட்டசபைதேர்தலால், இந்த விலை உயர்வு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.மேற்கு வங்கத்தில் இன்று நடைபெறும் கடைசி கட்ட ஓட்டுப்பதிவுடன், தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் முடிவடைய உள்ளன.

ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற @தர்தலில், பதிவான ஓட்டுகள் வரும் 13ம் @ததி எண்ணப்படுகின்றன. இதையடுத்து, அன்று மாலையி@லா அல்லது மறுநா@ளா பெட்ரோல்

விலையை, எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இ@தபோல் டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையை, மத்திய அரசுஉயர்த்தும் என்று தெரிகிறது.இந்த விலை உயர்வை எதிர்பார்த்து, நுகர்பொருள் நிறுவனங்கள் மூன்றாவது முறையாக மீண்டும் விலையை உயர்த்த திட்டமிட்டுள்ளன.

இதன்படி, சமையல் எண்ணெய் விலை 3.5 சதவீதமும், ஷாம்பூ விலை 4.5 சதவீதமும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறதுமேலும் சோப்பு, @தங்காய் எண்ணெய் விலை 2-4 சதவீதமும், நூடுல்ஸ் உள்ளிட்ட நொறுக்குத் தீனிகளின் விலை 6-10 சதவீதமும் உயரும் என தெரிகிறது. குளிர்பானம், பழரச விற்பனையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், 8 - 10 சதவீதம் வரை விலையை உயர்த்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், அமெரிக்காவில் அரசு@வலை வாய்ப்பு பெறுவோரின் எண்ணிக்கை குறைந்து, தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெருகியுள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது. இதனால் சென்ற வெள்ளிக் கிழமையன்று, 93 டாலர் என்ற அளவில் குறைந்திருந்த ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை, திங்களன்று 98.80 டாலராக உயர்ந்தது.

**பருத்தி உற்பத்தி 3. 05 கோடி பொதிகளாக குறையும்**

மே 10,2011,00:38



புதுடில்லி: நடப்பு பருத்தி பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி மதிப்பீட்டை விட குறைவாகவே இருக்கும் என, மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலகளவில், பருத்தி உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நடப்பு 2010-11ம் ஆண்டு பருத்தி பருவத்தில் (அக்டோபர் - செப்டம்பர்), நாட்டின் பருத்தி உற்பத்தி 3.05 கோடி பொதிகள் (ஒரு பொதி என்பது 170 கிலோ) இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், கடந்த 2010ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், பருவம் தவறிய மழையால், பருத்தி உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால், மண்டிகளுக்கு குறைந்த அளவிலேயே பருத்தி பொதிகள் வந்தன.

நாட்டில், நடப்பு பருவத்தில் (அக்டோபர் - செப்டம்பர்), பருத்தி உற்பத்தி 3.20 கோடி பொதிகளாக இருக்கும் என, பருத்தி ஆலோசனை வாரியம் மதிப்பீடு செய்திருந்தது. இதன் உற்பத்தி குறைவாக இருந்ததால், சென்ற ஏப்ரல் மாதத்தில், இதை 3.10 கோடி பொதிகள் என, மறு மதிப்பீடு செய்துள்ளது.பருத்தி அதிகம் விளையும், குஜராத், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திர மாநிங்களில், கடந்த 2010ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், பருவம் தவறிய மழையால் பருத்தி உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டது. இதுபோன்ற காரணங்களால், நாட்டின் பருத்தி உற்பத்தி, முந்தைய பருவத்தை விட நடப்பு பருவத்தில் குறைந்த அளவே இருக்கும் என, மத்திய ஜவுளி துறை செயலர் ரீடாமேனன் தெரிவித்தார்.

தற்போது, நாள்தோறும் மண்டிகளுக்கு 26 ஆயிரத்து 470 பருத்தி பொதிகளே வருகின்றன. இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே பருவத்தை விட 55 சதவீதம் (58 ஆயிரத்து 823 பொதிகள்) குறைவாகும்.

நடப்பு பருவத்தில், மொத்த பருத்தி வரத்து 2.86 கோடி பொதிகளாக இருக்கும் என, ரீடா மேலும் தெரிவித்தார். மத்திய அரசு, நடப்பாண்டு பிப்ரவரி மாதத்தில், 55 லட்சம் பொதிகளுக்கு மேல் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கவில்லை. உள்நாட்டில் பருத்திக்கான தேவை வெகுவாக குறைந்துள்ளது. குறைந்த தேவை மற்றும் ஏற்றுமதி செய்ய முடியாத நிலை போன்றவற்றால், உள்நாட்டில் பருத்தி தேக்கம் அடைந்துள்ளது. இதன் விலை குறைந்துள்ளது.

சென்ற ஏப்ரல் மாத மத்தியில், ஒரு கேண்டி ஷங்கர் - 6 ரக பருத்தியின் விலை 62 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் மிகவும் அதிகரித்திருந்தது. இது, சில நாட்களிலேயே, 56 ஆயிரம் ரூபாயாக குறைந்து, சென்ற வாரத்தில் 44 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. பருத்திக்கான, தேவை குறையும் பட்சத்தில், விலை மேலும் குறையும் என, சந்தை வட்டாரத்தினர் கூறினர்.

மின்வெட்டு காரணமாக, ஜவுளி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், திருப்பூர் பகுதிகளில்

சாயப்பட்டறைகள் மூடப்பட்டுள்ளதால், ஜவுளி மற்றும் நூலிழை உற்பத்தி வெகுவாக சரிவடைந்துள்ளது. இதுபோன்றவையும் பருத்திக்கான @தவை குறைவதற்கு காரணமாகும்.

**ரோஜா கண்காட்சி நிறைவு : மலர் கண்காட்சிக்கு மனம்**

பதிவு செய்த நாள் : மே 09,2011,22:03 IST

ஊட்டி : ஊட்டியில் ரோஜா கண்காட்சி நிறைவு பெற்றதை தொடர்ந்து, தாவரவியல் பூங்காவுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நிலவும் கோடை சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகளை குதூகலப்படுத்தும் கோடை விழா துவங்கியது. இதன் முதன் நிகழ்ச்சியான ரோஜா கண்காட்சி கடந்த இரண்டு நாட்கள் நடந்தது.

இதனை பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் கண்டு களித்தனர். மேலும், மாலை நேரத்தில் தாவரவியல் பூங்கா அருகில்வுள்ள மைதானத்தில் கோடை விழா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், ஊட்டி தாவரவியல் பூங்காவுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகிரித்து வருகிறது. இங்குள்ள இத்தாலியன் பூங்கா உட்பட அனைத்து இடங்களிலும் பல வண்ண மலர்கள் பூத்துள்ளதால், அதனை கண்டு சுற்றுலா பயணிகள் பரவசமடைகின்றனர்.

இந்த பூங்காவில் வரும் 20ம் தேதி மலர் கண்காட்சி துவங்கிய 3 நாட்கள் நடக்கிறது. இந்த ஆண்டு இதனை காண மூன்று நாட்களில் திரளான சுற்றுலா பயணிகள் வருவார்கள் என்பதால், அவர்களுக்கான அடிப்படை தேவைகளை முன்னதாகவே மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் சுற்றுலா விழா கமிட்டியினருக்கு ஏற்பட்டுள்ளது.

**வத்தல் விளைச்சல் குறைவுஅரசு கொள்முதல் செய்ய கோரிக்கை**

பதிவு செய்த நாள் : மே 09,2011,03:35 IST

கோவில்பட்டி:கோவில்பட்டி பகுதியில் வத்தலுக்கு நல்ல விலையிருந்தும் குறைவான விளைச்சல் கிடைத்துள்ளதால் வத்தலை அரசே நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.தூத்துக்குடி மாவட்டத்தில் எட்டயபுரம், கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய மூன்று தாலுகாக்களிலும் கடந்தாண்டு அதிகமான மழை பெய்ததால் மானாவாரி பயிர்கள்

சேதமடைந்து விளைச்சல் முற்றிலும் பாதிக்கப்பட்டது. ஏற்கனவே கடன் வாங்கி விவசாயம் செய்து வந்த விவசாயிகள் இதனால் கலக்கமடைந்தனர்.

எனினும் மீண்டும் நம்பிக்கையுடன் பாசன வசதியுள்ள நிலங்கள் மற்றும் மானாவாரி நிலங்களில் மிளகாய் செடிகளுக்காக விதையிட்டனர். தொடர்ந்து நாற்பது நாட்களில் வளர்ந்த மிளகாய் நாற்றுகளை எடுத்து, முறையாக நிலங்களில் பயிரிட்டனர். மேலும் பயிர் செய்த மிளகாய் செடிகள் நல்ல விளைச்சலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மருந்தடிப்பது, செடியின் வேர்பாகத்தில் உரம் வைப்பது என தீவிரமாக கண்காணித்து மிளகாய் செடிகளை வளர்த்தனர். இன்றைய காலகட்டத்தில் நாட்டு சம்பா ரக மிளகாய் அதிக விளைச்சலை தராது என்பதால், அதிக விளைச்சல் கொடுக்குமென அரசு அறிமுகம் செய்த வீரிய ஒட்டு ரகத்தையே பெரும்பாலான விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

மேலும் ஏக்கருக்கு சுமார் 10 ஆயிரம் வீதம் செலவு செய்துள்ள நிலையில், தற்போது இந்தரக மிளகாய் விளைச்சல் குறைவாக உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதில் ஏக்கருக்கு சுமார் 10 முதல் 12 குவிண்டால் விளைந்தால் நல்ல விளைச்சல் என்கிற நிலையில், தற்போது ஏக்கருக்கு அதிகபட்சம் 8 குவிண்டால் மட்டுமே கிடைக்கிறது என்கின்றனர்.

இந்நிலையில் மிளகாய் வத்தலுக்கு கடந்தாண்டை போல் இல்லாமல் தற்போது நல்லவிலை இருக்கிறது. பிரபல வத்தல் மார்க்கெட் உள்ள விருதுநகர், சங்கரன்கோவில், சாத்தூர் நிலவரப்படி குவிண்டால் வத்தல் சுமார் 9 ஆயிரம் முதல் 9 ஆயிரத்து 500 வரையும், ஊட்டமின்றி விளைந்த சோடைவத்தல் குவிண்டாலுக்கு 3 ஆயிரம் முதல் 3 ஆயிரத்து 500க்கு விலை போவதாக சம்பந்தப்பட்டவர்கள் கூறுகின்றனர். ஆகவே நல்லவிலை இருந்தும் விளைச்சல் இல்லாததால் விவசாயிகளுக்கு பயன் கிடைக்குமா என்பது சந்தேகம் தான் என்கின்றனர்.

இந்நிலையில் தற்போது பெய்த கோடைமழையில் மிளகாய் செடிகளில் பிடித்திருந்த பூக்கள் உதிர்ந்து செடியும் மதப்பாகி விட்டதாக கூறுகின்றனர். ஆகவே தற்போதைய விலை தொடர்ந்து நீடிக்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்க மிளகாய் வத்தலை அரசே நேரடியாக கொள்முதல் செய்யவும் வேண்டுமெனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதுகுறித்து மதிமுக மாநில விவசாய அணி துணை செயலாளர் வரதராஜன் விவசாயிகள் சார்பில் முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

நடப்பு மே மாதத்தில்

# ரப்பர் விலை 12% குறையும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி



தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களில் இயற்கை ரப்பர் உற்பத்தி அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, இம்மாத இறுதியில் ரப்பர் விலை 12 சதவீதம் சரிவடைந்து ரூ.200-215 (ஒரு கிலோ)-ஆக குறையும் என தொழில் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். இது, டயர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும்.

சர்வதேச சந்தைகளிலும் ரப்பர் விலை குறைந்து வருகிறது. எனவே, ரப்பர் விலையில் மந்தநிலை உருவாகும் என்று விளைபொருள் முன்பேர தரகு வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் ஜியோஜித் காம்டிரேடு நிறுவனத்தின் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், பல வங்கிகள் கார் கடன்களுக்கான வட்டி விகிதங்களை உயர்த்தி உள்ளதால், மோட்டார் வாகனங்கள் விற்பனை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், டயர்களுக்கான தேவைப்பாடு குறையும். ரப்பர் விலை குறைந்து வருவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.